# வைணவம்

- இவ்வுலகில், ஒவ்வொருவனும் இம்மையிலும் மறுமையிலும் வாழ விரும்புவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.
- வாழவிரும்புவோன் தான் விரும்பும் வாழ்வைப் பெற அதற்கேற்பச் சில நற்கொள்கைகளைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.
- நற்கொள்கையையே சமயம் எனச் செப்புகின்றனர்.
- இச்சமயம் உலகம் தோன்றிய காலத்திலிருந்தே ஒவ்வொருவனிடமிருந்தும் உலவி வருகின்றன.
- பல சமயங்களுள் வைஷ்ணவமும் ஒன்றாகும்.
- வைஷ்ணவ சமயம் பல உயரிய உண்மைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பரந்த சமயமாகும்.
- வைணவ சமய முழுமுதற்கடவுள்-திருமால்
- உலகில் தீமைகள் பெருகும்போது விஷ்ணு அவதாரம் எடுத்து அவற்றை அழிப்பார் என்பது வைணவ சமயத்தின் நம்பிக்கை.
- மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற பத்து அவதாரங்கள் தசாவதாரங்கள் எனப்படுகின்றன.
- அவதாரம் என்பதற்கு ‘இறங்கி வருதல்’ என்பது பொருளாகும்.

**மச்ச அவதாரம்:**

- முதல் அவதாரம் - மீன் - நீர்ப்பிரளயத்திலிருந்து உலகைக் காப்பதற்காக எடுத்த அவதாரம் ஆகும்.

**கூர்ம அவதாரம்:**

- இரண்டாவது அவதாரம் - ஆமை - திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது மேருமலைக்கு அடியில் பிடிமானத்திற்காகத் திருமால் ஆமை உருவம் எடுத்து மேருமலைக்குப் பிடிமானமாக இருந்தார்.

**வராக அவதாரம்:**

- மூன்றாவது அவதாரம் - இரண்யாட்சன் என்ற அசுரனுடன் போரிட்டு பூமியை மீட்பதற்காக எடுத்த அவதாரம் ஆகும்.

**நரசிம்ம அவதாரம்:**

- நான்காம் அவதாரம் - பிரகலாதனைக் காத்து, இரணியனை அழித்தார்.

**வாமன அவதாரம்:**

- ஐந்தாம் அவதாரம் - 'உபேந்திரர்' என்றும் அழைக்கப்படுகிறார்.
- இந்த அவதாரம் மகாபலி சக்கரவர்த்தி நடத்திய ராஜசூய யாகத்தை முறியடிக்க மூன்றடி மண் கேட்டார். மிகுந்த செருக்குடன் இருந்த மகாபலி தர சம்மதித்தான். திரிவிக்கிரமன் வடிவு அடுத்து விண்ணை ஒரு காலாலும், மண்ணை ஒரு காலாலும் அளக்க மூன்றாம் அடியை அவனது தலையில் வைத்து அவன் அகந்தையை ஒழித்தார்.

## பரசுராமர் அவதாரம்:

- ஆறாவது அவதாரம் - சத்திரிய மன்னர்களின் தலைமுறைகளை அழிப்பதாக சபதம் பூண்டவர்.
- இவர் இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகிய இரண்டு காலங்களிலும் வாழ்ந்தார்.
- கேரளம் பரசுராமரின் பூமி எனப்படுகிறது.

## இராம அவதாரம்:

- ஏழாவது அவதாரம் - இராவண வதத்தை நடத்தி விபீஷணனுக்கு பட்டம் சூட்டினார்.

## பலராமர் அவதாரம்:

- எட்டாவது அவதாரம் - விஷ்ணுவின் அவதாரங்களிலேயே வெண்ணிறத்தில் தோன்றிய அவதாரம். இது - ஆதிசேஷனின் வடிவம்தான் பலராமர்.
- மகாபாரதத்தில் கண்ணனின் செய்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்.

## கிருஷ்ண அவதாரம்:

- ஒன்பதாவது அவதாரம் - அர்ஜுனனுக்கு தேரோட்டியாகவும் மாறினார். இந்த அவதாரத்தில் கிருஷ்ணன் கூறிய உபதேசம் பகவத்கீதையாகும்.
- பகவத்கீதை : கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அருளியது.
- உத்தவகீதை : கிருஷ்ணன் உத்தவருக்கு அருளியது.

## கல்கி அவதாரம்:

- பத்தாவது அவதாரம் - கலியுகத்தின் இறுதியில் தோன்றி அனைத்து தீயவைகளையும் அழிப்பார் எனக் கூறுப்படுகிறது.
- திருமாலைப் போற்றிப் புகழும் பாக்கள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் ஆகும்.
- வைணவ மரபில் கோயிலில் உள்ள இறைவனைப் போற்றிப் பாடுதல் மங்களாசாசனம் செய்தல் எனப்படும்.

## வைணவத்தின் தொன்மையும் அதன் பிரமாணங்களும்:

- பிரமாணங்களைக் கொண்டு வைணவத்தின் தொன்மையை விளக்கி கூறுவோம்.
- ஒன்றை உள்ளபடி உணருவதற்குக் காரணம் எதுவோ அது பிரமாணம் எனப்படும்.
- பிரமாணம் மூன்று வகைப்படும். அவை, பிரத்தியஷயம், அனுமானம், சப்தம் என்பதாகும்.

## பிரத்தியஷயம்:

- ஊறு, ஓசை, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய இக்குணங்களையும், இக்குணங்களுக்கு இருப்பிடமான திரவியங்களையும் உள்ளபடி உணருகைக்குக் காரணமான வெளிஇந்திரியங்களும், இன்பம் துன்பம் முதலியவற்றை அறிவதற்கு சாதனமாக உள்ள இந்திரியமும் பிரத்தியஷயமாம்.

**<u>அனுமானம்:</u>**

- **ஓரிடத்தில் காணப்படும் இரண்டு பொருள்களுள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் இருக்கும் நிலைமையைக்கண்டு வேறோரிடத்தில் காணப்படாத ஒன்றைக் கண்டதால் ஊகித்து உணருகிறோம். அல்லவா?**

*உதாரணமாக* :

- **ஓரிடத்தில் நெருப்பு, புகை இவ்விரண்டையும் அடிக்கடி காண்கிறோம். அவ்வாறு காணும் நமக்கு புகை நெருப்பை விட்டுப் பிரிந்து தனித்து இருக்கும் பொருள் அன்று என்னும் உண்மை நன்கு புலனாகும்.**
- **மலை முதலிய உயர்ந்த இடத்தில் புகையை மட்டும் நாம் காண்பதாக வைத்துக் கொள்வோம்.**
- **மலையில் நெருப்பு உண்டு என்று அறிய காரணமாகக் கண்ட புகையே அனுமானமாம்.**

வாய்மையே வெல்லும்

**<u>சப்தம்:</u>**

- **இந்திரியங்களினாலும், அனுமானத்தினாலும் உள்ளபடி உணரமுடியாத உயரிய உண்மைப் பொருளை உள்ளபடி உணருதற்குக் காரணமான ஆசிரியர்கள் அருளிச் செய்த நூல்களாகும்.**
- **உபநிடதங்களில், வைணவ உபநிடதங்களின் எண்ணிக்கை 13 ஆகும்.**

- வைணவத்தின் நாலாயிரத்திவ்யப் பிரபந்த நெறியைப் பரப்பியவர்கள் தென்கலையார் எனப்பட்டனர்.
- வடகலையார் வேத வழியினர்.

## வைணவத்தின் தத்துவங்கள்

- வைணவத்தின் தத்துவங்கள் மூன்று. அவை சித்து, அசித்து, ஈஸ்வரன் என்பன.

சித்து - உயிர்களின் தொகுதி

அசித்து - அறிவில்லாத பொருள்கள்

ஈஸ்வரன் - முத்தொழில்களை ஆற்றுபவன்.

------**************-----